தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

# திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(31.01.2024 முதல் 04.02.2024)

அறிக்கைஎண்: 09/2024 தேதி : 30.01.2024

## திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31 - 32 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 23 °செ ஆகவும் பதிவானது.

## திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (31.01.2024 முதல் 04.02.2024).

| கடந்த வார வானிலை (25.01.2024 முதல் 29.01.2024) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (31.01.2024 முதல் 04.02.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 25/01 | நாள்-2 26/01 | நாள்-3 27/01 | நாள்-4 28/01 | நாள்-5 29/01 | தேதி | நாள்-1 31/01 | நாள்-2 01/02 | நாள்-3 02/02 | நாள்-4 03/02 | நாள்-5 04/02 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 1 | 1 | 1 | 0 | 0 |
| 31 | 31 | 31 | 31 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 31 | 32 | 32 | 32 | 33 |
| 22 | 23 | 22 | 23 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 22 | 23 | 23 | 23 | 23 |
| 5 | 5 | 5 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 5 | 3 | 0 |
| 77-73 | 77-72 | 80-78 | 78-69 | 76-74 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-60 | 90-60 | 90-60 | 90-60 | 90-50 |
| 4 | 4 | 5 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 10 | 8 | 10 | 12 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

## திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 31.01.2024 முதல் 02.02.2024 ஆகிய தினங்களில் லேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31 – 33 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 23 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 – 12 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI. |

| | | |
|---|---|---|
| நெல் | | அறுவடை செய்த நெல் விதைகளை தற்போது நிலவும் வறண்ட வானிலையை பயன்படுத்தி நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும். |
| | பூக்கும் பருவம் | பின் தாளடி பருவத்தில் விதைத்த நெல் வயல்களில், நெற்பழம் நோயைக் கட்டுப்படுத்த கதிர் வரும் தருனம் மற்றும் பால் பிடிக்கும் தருனத்தில் புரஃபிகோனோஸோல் (டில்ட்) 200 மி.லி/ஏக்கர் அல்லது காப்பர் ஹைட்ராக்ஸ்சைடு 500 கி/ஏக்கருக்கு தெளிக்கவும். |
| உளுந்து | விதைப்பு | உகந்த வானிலையை பயன்படுத்தி உளுந்து விதைகளை கார்பன்டெசிம் 2 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | ஆடு மற்றும் மாடு | கால்நடைகளை ஓட்டுண்ணி தாக்கத்தில் இருந்து பாதுகாக்க குளம்/ குட்டை/ நீர் தேங்கிய பகுதிகளில் மேய்ச்சலுக்கு விடுவதை தவிர்க்கவும். |

## குறுஞ்செய்தி

உகந்த வானிலையை பயன்படுத்தி உளுந்து விதைகளை கார்பன்டெசிம் 2 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.

.

**இயக்குநர்**